# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் ௨௰ | தாரண—வைகாசி 1944—மே | மலர் ௨


## மகிழ்கின்றோம்

எம் கரந்தைப் புலவர் கல்லூரியில் வித்துவான் புகுமுக வகுப்பிலும் (Vidvan entrance) வித்துவான் முதல் இரண்டாண்டு வகுப்பிலும் (Vidvan Preliminary) கல்விபயின்று தேர்விற்குச் சென்ற மாணவர்கள் அத்துணைபேரும் தேர்ச்சியுற்றனர் என்பதனைக் கண்ணுற்றுப் பெருமகிழ் வெய்தினேம். கரந்தைப் புலவர்கல்லூரி ஆசிரியர்கள் ஊக்கத்தோடு உழைத்துக் கல்விபயிற்றினமையாலன்றோ இங்ஙனம் மாணவர் நூற்றுக்கு நூறுபேர் தேர்ச்சியுற்றனர். இவ்வாசிரியர்கட்கு எம் நன்றியறிவைத் தெரிவிக்கின்றோம்.

நம், கரந்தைப்புலவர் கல்லூரி தொடங்கப் பெற்ற நாட்களாகப் பல்கலைக் கழகத் தேர்விற்குச் சென்ற மாணவர்கள் நூற்றுக்கு நூறு பேரும், நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பதின்மரும் தேர்ச்சியுற்றே வருகின்றனர். இங்ஙனம் சிறப்புறப் பணியாற்றுங் கல்லூரியிற் சேர விரும்பும் மாணவர்கள் சூன்றிங்கள் பத்தாம் நாளிற்குள் எம் சங்கத்தலைவரவர்கட்கு ஒன்றரையணாத்தபாற்றலையனுப்பி விண்ணப்பத்தாளைப் பெற்று விண்ணப்பித்துக் கொள்ளவேண்டுகின்றோம்.

## திருவரங்கனார் துடுமென மறைந்தார்

திருநெல்வேலிச் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தை நிறுவியவரும், அதன் அமைச்சரும், மறைமலையடிகளாரின் மருகரும் ஆகிய திருவாளர், வ. திருவரங்கம் பிள்ளை அவர்கள் துடுமென மண்ணுலகவாழ்வினின்றும் மறைந்தமை கேட்டு மிகமிக வருந்துகின்றோம். திருவரங்கனார் அவர்கள் முயற்சியே உருவானவர்கள். ஏறக்குறைய இருபத்திநான்காண்டுகளாகச் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தை நிறுவிச் செவ்வனே நடத்திவந்தார்கள். "**செந்தமிழ்ச் செல்வி**" எனுந் திங்கள் வெளியீட்டைத் தொடங்கித் திறம்பெற நடத்தி வந்தார்கள். இவர்களால் நாட்டப்பெற்ற "**சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்**" தமிழன்னைக்குச் சிறந்த மணிகளென்னும் நூற்களை அச்சிட்டு அணிந்துளது. இக்கழக நூல்கள் மேல்நாட்டினருங் கண்டு வியக்குமுறையில், அழகிய கட்டுக்களையும், மழமழப்பான

மேலட்டைகளையும், நூன்முகப்பில் பொன் பூக்களையும்பெற்று, யாம் கையிலேந்தும் பொழுதே மகிழ்ச்சியைப்பெருகச்செய்கின்றன. பிழையின்றிச் சிறந்த முறையிலும் அச்சிடப் பெற்றுள்ளன. புலவர் பலர்க்கு, இக்கழகம் பேராதரவு தந்து அவர்களை ஊக்கியும் வந்தது. தமிழ் நாட்டில் கூட்டுறவுமுறையில் தமிழர் சிறந்த பணியாற்றிப் புகழ் கொள்ளலாம் என்பதற்கு, அறிகரியாக நம் திருவரங்கனாரால் நாட்டப்பெற்ற இக்கழகம் சிறந்து மிளிர்கின்றது. இங்ஙனம் புலமையாளர்கட்காதரவளித்தும், நூலெழுதுவோரை ஊக்கியும், கட்டுரைவரைவோர்க்காவன புரிந்தும், சிறந்தநூல்களை வெளியிட்டும், மாநாடுகள் கூட்டுவித்தும் தமிழ்ப்பணிபுரிந்து தமிழ்நாட்டையும் தமிழ்மொழியையும் சிறப்பித்து வரும் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்குத் தந்தையாய், தாயாய், மற்றுமாய் நின்றுதவிய நம், திருவரங்கனார் மறைவு தமிழ் நாட்டிற்கும் அக்கழகத்திற்கும் மிகப் பேரிழப்பாகமுடிந்தது. தன் கணவனைத் துடுமென இழந்துவருந்தும், புலமைத் திருவாட்டி நீலாம்பிகைஅம்மையார்க்கும், கழக முகவர், வ. சுப்பையா பிள்ளை அவர்கட்கும் எம் ஆழ்ந்த துயரினை அறிவிக்கின்றோம். தமிழ்ப்பணிபுரிதலையே தலைப்பணியாகக்கொண்ட திருவரங்கனாரின்னுயிர் இறைவன்றிருவடி நீழலில் இன்புற்றுத் திளைக்க இறைவனை வழுத்துகின்றோம்.

பொழிலாசிரியர்.

தஞ்சைநகரமன்ற மண்டபத்தில் 1—5—44 மாலை 7 மணிக்குக் காலஞ்சென்ற சர். ஏ. டி. பன்னீர்ச்செல்வம் அவர்களின் நினைவுநாள் கூட்டம் நிகழ்வுற்றது. சர். பி. டி. இராசன் அவர்கள் தலைமை தாங்கினார்கள். பேரறிஞர் (Dr.) A. கிருட்டினசாமி M. A., Ph. D., Bar-at-Law, அவர்கள் பன்னீர்ச்செல்வம் அவர்களின் பண்புகளைப் பற்றி அரியதோர் விரிவுரையாற்றினார்கள். இராவு பகதூர் A. Y. அருளாநந்த சாமி நாடார் அவர்களைத்தலைவராகக் கொண்ட கழகம் ஒன்று நிறுவப்பெற்றது. அக்கழகத்தின் சார்பில், சர். பன்னீர்ச்செல்வம் அவர்கட்கு நினைவுச்சின்னம் ஏற்படுத்துவான் வேண்டி ஓர் இலக்கத்திற்குமேலும் பொருள் திரட்டுவதென அக்கழகத்தார் முடிவு செய்துள்ளனர்.

---

1—5—44 மாலை 6 மணிக்குத் தஞ்சை நகரமன்ற மண்டபத்தில் நம் சங்கச்சார்பில் தஞ்சை மாவட்டத் தமிழிசைக் கழகம் நிறுவுவான் வேண்டி ஒரு பொதுச்கூட்டம் நிகழ்ந்தது. கூட்டத்திற்குத் தலைமை தாங்க வேண்டுமென சர். பி. டி. இராசன் அவர்களை இராவுசாகிபு ஐ. குமாரசாமிப்பிள்ளை அவர்கள் வேண்டிக்கொண்டார்கள். சர். பி. டி. இராசன் அவர்கள் தலைமைதாங்கி முன்னுரை கூறியபின், பண்டித, வித்துவ, லெ. ப. கரு. இராமநாதன் செட்டியாரவர்களும், பேரறிஞர் A. கிருஷ்ணசாமி M. A. Ph. D.; Bar-at-Law, அவர்களும் தமிழிசை யியக்கத்தின் நோக்கத்தை விளக்கிச் சிறந்த சொற்பொழிவாற்றினார்கள். இராவுபகதூர், A. Y. அருளாநந்தசாமி நாடாரைத் தலைவராகக்கொண்ட தமிழிசைக் கழகம் நிறுவப்பெற்றது. இராவு சாகிபு, ஐ. குமாரசாமிப்பிள்ளை அவர்கள் நன்றிகூறக் கூட்டம் இனிதே நிறைவேறியது.



திரு. நாவலர், பண்டித, ந. மு. வேங்கடசாமி நாட்டார்

திரு. நாவலர், பண்டித,

## ந. மு. வேங்கடசாமி நாட்டார் நினைவுத் திருநாள்.

---

இத்திருநாள் 13—5—44 சனிக்கிழமை பிற்பகல் 6 மணிக்குச் கரந்தைத் தமிழ்ச்சங்கத் தமிழ்ப்பெருமன்றத்தில் இந்துமத அற நிலயப் பாதுகாப்புக் கழகத்தலைவர், திவான்பகதூர் T. M. நாராயண சாமிபிள்ளை M.A., B.L.; அவர்களின் சீரிய தலைமையில் கொண்டாடப் பெற்றது.

**நிகழ்ச்சி நிரல்**

விழாக்கழக அமைச்சர் வித்துவான், அ. வடிவேலர் அவர்கள் திருவாளர் நாராயணசாமிபிள்ளை அவர்களை இந்நினைவுத்திருநாளுக் குத் தலைமைதாங்க வேண்டுமுகத்தான் கூறியன :—அன்பர்களே! பெரியோர்களே! நம் நாட்டார் ஐயா அவர்களின் அறுபதாம் ஆண்டு நிறைவு விழாவிற்குத் தலைமை தாங்க யாம் திருவாளர் நாராயண சாமி பிள்ளை அவர்களை வேண்டிக்கொண்டோம். அவர்களும் உடன் பட்டிருந்தார்கள். நாட்டாரையா அவர்கள் உயிருடனிருந்து நிறைவு விழாவினை இவர்கள் தலைமையில் சிறப்புறக்கொண்டாடி மகிழும் பேற்றினை யாம் இழந்தோம். இன்று நிறைவுவிழா நாட்டாரவர்கள் மறைந்தமையால் நினைவுவிழாவாக மாற்றப்பெற்றபின் அவ்விழா விற்கும் இவர்களைத் தலைமைதாங்க வேண்டினேம். இவர்கள் மறுத் துரையாது இவ்விழாவிற்குத் தலைமைதாங்க எழுந்தருளியுள்ளார்கள். இவர்கள் தலைமையில் நாட்டாரவர்களின் திருவுருவப்படத்தைக் கோவை, கமலா பஞ்சாலைத் தலைவர், திரு. R. V. இலக்குமையா நாயுடு அவர்கள் திறந்துவைப்பார்கள். அன்பர்கள் பலர் சொற் பொழிவாற்றுவார்கள். அன்பர்கள் அனைவரும் அமைதியுடனிருந்து கேட்டின்புற வேண்டுகின்றேன்.

**திரு. நாராயணசாமிபிள்ளை அவர்கள் சொற்பொழிவு:—**

அன்பர்களே! நம் நாட்டாரவர்களின் மறைவுச் செய்தியை யான், புகைவண்டியில் சென்றுகொண்டிருந்த போது கேள்வியுற் றேன். என்உளம் மாற்றமுற்றுக் கலங்கியது. அக்கலக்கத்துக் குரிய காரணத்தை யான் பன்முறையும் ஆராய்ந்தேன். இதுபோழ்து அக்காரணத்தை அறிந்தேன், நம் நாட்டாரவர்கள் தமிழ் நாட்டிற் கும் தமிழ்மொழிக்கும் எண்ணற்ற தொண்டுகளைச் செய்தார்கள். தமிழ்நாடு அவர்களுடைய முன்னேற்றபணிகளை விரும்பி ஏற்றுக் கொண்டு முன்னுக்குவாராமைகண்டு அவர்கள் இவ்வறுபதாம் ஆண்டுவிழாவையும் விரும்பாது மறைந்தனர். நம் நாட்டாரவர் களின் நினைவுக் குறியாக நாம் செய்யவேண்டிய தொண்டுகள் பல உள்ளன. தமிழ் மொழியில் பற்பலநூல்களை வெளியிட்டு நம் நாட்டார் ஐயா அவர்கள் செய்தது போன்று தமிழ் மொழிக்கும் தமிழ் நாட்டிற்கும் பற்பல தொண்டுகள் புரிந்து தமிழ் நாட்டையும்

தமிழ் மொழியையும் முன்னேற்றமுறச் செய்வோமாக. இதுபோது திருவாளர், R. V. இலக்குமையா நாயுடு அவர்களை நாட்டார் ஐயா அவர்களின் திருஉருவப் படத்தைத் திறந்துவைக்குமாறு வேண்டிக்கொள்ளுகிறேன்.

**திருவாளர் R. V. இலக்குமையா நாயுடு அவர்கள்:—**

தலைவரவர்களே! அன்பர்களே! யான் தங்கள் முன்னிலையில் ஐயா அவர்களின் அரிய பண்புகளைப்பற்றிப் பேசவேண்டுமென்று எண்ணி வந்தேன், என் உளம் இதுபோது ஒன்றும் பேச இடங்கொடாமையால் எனக்கு அளித்த இப்படத்திறப்புவிழாப் பணியினையாற்றி அமைகின்றேன் எனக் கண்ணீர்வாரக் கூறிப் படத்தினைத்திறந்து வைத்து அமர்ந்தார்கள்.

## சொற்பொழிவுகள்.

**வித்துவான், வீ. உலகஊழியர் அவர்கள்:—**

தலைவரவர்களே! புலவர் பெருமக்களே! ஏனைய பேராசிரியர்களிடங் காணப்பெறாத பண்புகள் பல நம்நாட்டாரையாஅவர்களிடங் காணப்பட்டன. சிறந்த புலவராகிய இவரைப் போற்றுதல் தமிழ் மக்களது தலையாய கடனாகும். நம் நாட்டாரவர்கள் திருச்சியிலிருந்து வாழ்ந்த தெருவில் தாயுமானார், மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளைபோன்ற புலவர் பெருமக்கள் வாழ்ந்தனர். நம் நாட்டாரவர்கள் தாம் குடியிருந்த வீட்டை விற்றுவிட்டனர். தாயுமானார் வாழ்ந்த இல்லில் இன்றும் தாயுமானார் மரபினர் அவர் மறைந்தநாளில் படையல்செய்து கொண்டாடுகிறார்கள். திருவாளர் பிள்ளையவர்கள் இருந்தவீடு மலரில் தேனிருக்கும்வரை மலரைச்சூழும் வண்டுபோன்றவர்கள் இருக்குமிடமாயிற்று. நம் நாட்டார் வாழ்ந்த வீட்டினையும், நம், மகாவித்துவான் பிள்ளையவர்கள் வாழ்ந்த வீட்டினையும் விலைக்கு வாங்கி ஓம்படைபுரிந்து, அவர்களின் நினைவுநாளைக் கொண்டாடுதல் தமிழர்களின் கடமையாகும். தமிழர்களாகிய யாம் இதனைச் செய்தல் அவசியம் எனக்கூறி அமைகின்றேன்.

**கரந்தைக் கவியரசு, R. வேங்கடாசலம் பிள்ளையவர்கள்:—**

நம் நாட்டாரையா அவர்கள் எத்துணையோ நூற்குழவிகளையீன்றார்கள்; மக்களையும் பெற்றார்கள். அவைகளை, அவர்களைப் புரப்பதற்கு வழி வகையுஞ்செய்தமைத்துள்ளார்கள். அவர்கள் வாழ்நாளின் பிற்பகுதியில் அவர்கள் ஈன்ற கன்று கரந்தைப் புலவர் கல்லூரியாகும். கல்லூரியாகிய கன்றினை ஈன்ற அண்மையிலேயே பாதுகாப்பின்றி விட்டுவிட்டுப் பசுவாகியஅவர்கள் மறைந்துவிட்டார்கள். இப் புலவர் கல்லூரியெனும் கன்று, நன்றாகப்பாலூட்டி உரம்பெற்று வளர்ந்தோங்க வேண்டுமேல், மேடைமீதுள்ள தாங்கள் நால்வருந் தான் நாற்காம்புகளாக இக்கல்லூரியாகியகன்று ஊட்டுதற்கு, உதவ வேண்டும். (நால்வர்: இராவ்பகதூர் A. Y. அருளாநந்தசாமி நாடார்,

திவான்பகதூர் T. M. நாராயணசாமி பிள்ளை, பூண்டி, பெருநிலக் கிழவர் அ. வீரையா வாண்டையார், கோவை பஞ்சாலைத் தலைவர் R. V. இலக்குமையா நாயுடு ஆகியோர்.) எனக் கூறி அமை கின்றேன்.

**திரு. பொன்னண்ணுக் களத்தில்வென்ருர் அவர்கள்:—**

யான் நாட்டாரையாவைவிட வயதில் முதிர்ந்தேனுயினும் யான் பண்டிதத் தேர்விற்குத் தேர்வெழுதச் சென்றகாலையில் நாட்டா ரவர்கள் தேர்வுத் தலைவராகவிருந்தார்கள். இங்ஙனம் இளமையி லேயே பெரும் புலமையுற்றுத் திகழ்ந்த இவர்கள் பிரிவு தமிழ் மொழிக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பாகும் எனக்கூறி அமைகின் றேன்.

விழாக்கழகப் பொருளாளர், K. A. P. **விசுவநாதம் அவர்கள்:—**

தலைவரவர்களே பெரியோர்களே! நாட்டாரையா உயிருட னிருந்து இவ்விழாவையாற்றி மகிழும்பேற்றைத் தமிழ்நாடு இழந்து விட்டது. இவர்கள் விழாவிற் செய்யத்தகுந்த தொண்டுகளாகக்குறிப் பிட்டவற்றுள் படத்திறப்பு விழாவினைச் செய்துவிட்டோம். நூல் வெளியிடுதல் என்ற அமைப்பில் நம் நாட்டாரையா வரலாற்றினை இதுபோது அச்சிட்டு வெளியிட்டுள்ளோம். விழாவிற்கென அச்சிடப் பெற்ற, புத்தகங்களை வாங்கிச் சென்றவர்கள், பொருள்பெற்று அனுப்புகின்றேனென்றவர்கள், இன்னும் பொருள் பெற்றனுப்பா துள்ளனர். அவர்கள் யாவரும் பொருள் பெற்றனுப்பினுல், அண்ணு மலைப் பல்கலைக்கழக வரலாற்று விரிவுரையாளரா யிலங்கிக் காலஞ் சென்ற ச. க. கோவிந்தசாமி பிள்ளை M. A., அவர்கள் திரட்டிய கட் டுரைகளையும் யான் திரட்டிய கட்டுரைகளையும் அச்சிட்டுவிடலாம் என எண்ணுகின்றேன். விழாநாளில் ஏழைகட்குணவளித்தல் என்ற நிகழ்ச்சியின்படி, பூண்டிவாண்டையார் அவர்கள் அனுப்பிய நான்கு மூடடை அரிசியைக்கொண்டு அளித்துவிட்டோம். கரந்தைப் புலவர் கல்லூரி மாணவர்கட்குப் பரிசுவழங்க நிதி ஏற்படுத்துதல் என்ற நிகழ்ச்சி ஒன்று விழா அறிக்கையிற் காணப்பெறுகின்றது. அன்பர்கள் அளித்த பொருள் ஆயிரம் வெண்பொற்காசுகள் எஞ்சியுள்ளமையின் அவ்வாயிரத்தையும் கரந்தைப் புலவர் கல்லூரிக்கென அளிக்குமாறு விழாக்கழகத் தலைவரிடம் (திரு அ. வீரையா வாண்டையாரிடம்) ஒப்படைக்கின்றேன். (வாண்டையா ரவர்கள் பொருளை வாங்கிச் சங்கத் தலைவர், இராவுபகதூர், A. Y. அருளாநந்தசாமி நாடார் அவர் களிடம் ஒப்படைத்தார்கள்.) விசுவநாதம் மேலும் பேசும்பொழுது, யான் யாருக்கும் தலைவணங்கி நடக்காதவன் என என்னைப்பற்றிப் பலர் குறை கூறுவார்கள். எங்ஙனமாயினும் நாட்டாரையா ஒழுக்கம் ஒன்றிற்கே யான் தலைவணங்கி விட்டேன். நாட்டாரையாவைப் போன்று இக்காலத்துக் கல்வி பயிலும் மாணவர்களும் ஒழுக்க நெறி யில் நிற்கவேண்டுமென வேண்டிக்கொள்ளுகின்றேன்.

**திரு. G. S. சொக்கலிங்கம் பிள்ளை அவர்கள் :—**

நாட்டாரையா மதுரைத் தமிழ்ச் சங்கத்திற்கு வருங்காலையிலெல் லாம் யாவரிடத்தும் பணிவோடு நடந்துகொள்ளுவார்கள். ஒருமுறை

கலிங்கத்துப் பரணியில் ஒரு சந்தேகங் கேட்டார்கள். அவ்வையத்தை யானே அகற்றவியலாதவனுய், கந்தசாமிக்கவிராயருடனும், சேத்தூர் சுப்பிரமணியக் கவிராயருடனும் ஆராய்ந்து அச்சிட்ட மூலபாடம் பிழையெனக் கண்டு அவருக்கு விடை கூறினேன். நம் நாட்டாரவர் களைப் போன்றே இக்கால மாணவர்கள் யாவரும் அடங்கி நடக்கப் பழகிக் கொள்ளவேண்டும்.

**திரு. உடையப்பா அம்பலம் அவர்கள்:—**

நாட்டாரையா அவர்கள் மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதத் தேர்வில் முதன்மையாகத் தேர்ச்சியுற்றதால் சிறப்பெனக் கூறிச்சிலர் பாராட்டினுர்கள். அப்பட்டம் பெற்றதால் நம் நாட்டாரவர்கட்குச் சிறப்பொன்றுமில்லை. அவர்கட்குப் பட்டமளித்து மதுரைத் தமிழ்ச் சங்கம் புகழ்கொண்டதெனக் கூறுவேன்.

**திரு வே. முத்துசாமி ஐயர் M. A., L. T., அவர்கள்:—**

நாட்டாரையா அவர்களின் பிரிவு குறித்து யான் எழுதிய வெண் பா ஒன்றினைப் படித்து அமைகின்றேன்.

சொன்னின்ருய் அன்பருளந் தோறுநின்ருய் இன்றுதெய்வக்
கன்னின்ருய் எம்வேங் கடசாமீ !—என்னின்ற
காலமிளிர் செந்தமிழின் கண்மணிபோன் ருெண்மணியாய்
ஞாலமொளி செய்வாய் நனி.

சாமி. வேலாயுதம் பிள்ளை அவர்கள் பி. ஏ. எல். டி. கோ. சி. பெரியசாமிப்புலவர், வித்துவான் வி. அ. அரங்கசாமிப்புலவர், எம். அரங்கநாதன், வித்துவான் ஐ. இராமையாச் சேதிராயர், இராமச் சந்திரநாயுடு பி.ஏ. சித்திரக்கவி, அப்துல்கபூர் சாயபு, இராமச்சந்திர பத்தர் பி. ஏ. முதலியவர்களும் நாட்டார் அவர்களின் சீரிய பண்பு களைப் பற்றிச் சொற்பொழிவாற்றினுர்கள். தலைவர் முடிப்புரை கூறி னுர்கள்.

விழாக் கழகத் தலைவர், **திரு. அ. வீரையாவாண்டையாரவர்கள்:—**

தலைவரவர்களே! அன்பர்களே! நாட்டாரையா உயிருடனிருக்குங் காலையில் அறுபதாம் ஆண்டுவிழாவினைச் சிறப்புற நடத்தவேண்டும் விழாக் கழகழகத்திற்குத் தலைமை தாங்கவேண்டுமென அன்பர்கள் என்னை வேண்டிக்கொண்டார்கள். யானும் இவ்விழாவினைச் சிறப் புற நடத்தினுல் இவ்விழாவிளம்பரங் காரணமாகக் கரந்தைப் புலவர் கல்லூரி நிலையுற்றுப் புகழ்கொண்டு நற்பணியாற்ற ஒரு வாய்ப்பேற் படும் எனக் கருதித் தலைமை ஏற்க உடன்பட்டேன். நாட்டாரைச் சிறப்பிக்குமுகத்தான் புலவர் கல்லூரியைச் சிறப்பித்ததாகுமென் றெண்ணினேன். நம் நாட்டாரவர்கள் துடுமென மறைந்து விட்டார்கள். கல்லூரி வளர்ச்சிக்கான பணியில் என்னுலியன்ற வற்றைச் செய்துவருகின்றேன். மேலும் என்னுலியன்றவற்றைச்

செய்ய என்றுங் கடமைப்பட்டுள்ளேன். நம் தலைவர் நாராயணசாமிப் பிள்ளை அவர்களை இப்படத்திறப்பு விழாவிற்குத் தலைமை தாங்க வேண்டிக்கொண்டோம். நம் வேண்டுகோட்கிணங்கித் தலைமை தாங்கினார்கள். அவர்கட்கும், சொற்பொழிவாளர்கட்கும் என் உளமார்ந்த வணக்கத்தைச் செலுத்துகின்றேன் எனக் கூறி முடித்தார்கள். தமிழ் வாழ்த்துடன் கூட்டம் இனிதே நிறைவெய்தியது.

---

## கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை

---

### தமிழவேள் நினைவுத்திருநாள்.

---

நிகழும் தாரண, சித்திரை, உஎ (9–5–'44) ஆம் நாள் செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்குச் சங்கத் தமிழ்ப் பெருமன்றத்தில், திருவாளர், தி. இராதாகிருட்டின நாயுடு அவர்கள் B. A, B.L., (Official Receiver) தலைமையில் தமிழவேள் நினைவுத் திருநாள் கொண்டாடப் பெற்றது.

கரந்தைக்கவியரசு, R. வேங்கடாசலம் பிள்ளை அவர்களும், வித்துவான், திரு. கோ. சி. பெரியசாமிப்புலவர் அவர்களும் தமிழவேளின் சீரிய பண்புகளைப் பற்றிச் சொற்பொழிவாற்றினார்கள்.

ம. வரதராசன், B, A., B. L., அவர்கள் நன்றிகூறக் கூட்டம் இனிதே நிறைவேறியது.

ஓ

---

நாவலர், பண்டிதர்,

## திரு ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள் பிரிவுபற்றிய இரங்கற்பா.

நாவலபண் டித்நாட்டார் நந்தமிழ்த்தாய் நற்கோயில் நண்ண இந்தப்
பூவுலகை விழுங்கியதே பொங்குதுயர்க் கடலந்தோ! புலமை சான்ற
பாவலர்தம் உளமுருகிப் பதைபதைத்தார்! பயில்மாணார் பதறி வீழ்ந்தார்!
நாவறழக் மண்ணிருள நடுநடுங்கிச் சுற்றமுளம் நைந்த தம்மா!

திண்ணியநற் கலைப்பயிற்சி, சிறந்தவிரி வுரைமாட்சி, தெய்வப் பற்றே,
ஒண்மையநூ லுரைக்காட்சி, உயர்பதவி, உலகமெலாம் உவக்கும் பட்டம்,
பெண்மையெனும் பெருமையெலாம் பிறங்குமனை, கலைச்செல்வம் பெற்ற மக்கள்,
எண்ணரிய பெருஞ்செல்வம், இன்னனசீர் ஒருங்குற்றாய்! எந்தால்! நீயே!

நின்பழைய நல்வினையாய், நின்னினிய மனைவாழ்வாய், நினது சுற்றம்
மன்னியநின் மக்களவர் மக்களெலாம் வளர்த்துவரு மாண்பார் தேவாய்,
அண்மியவர் படுதுயரை, அந்தோ! என் கூறல்! அவர்க் கமைந்த காலம்,
நன்னர்நின திலம்போற்ற, நாணாளும் திருவருளை நாடு வாயே!

முற்பிறவி தனிலனியேன் முற்றியநல் வினையிங்கு முன்ன லுண்டேல்,
மற்றவைகள் மிகச்சிலவே, மற்றவற்றுட் சிறந்ததுநின் மாண்பார் நட்பே!
உற்றவிடத் ‘தென்பழைய உளமார்ந்த நண்பனெ’ன உரைத்தாய்! அந்தோ!
அற்றதுமற் றவ்வினையும், அந்தோ! என் வாழ்க்கைஒளி யான்ற வானே!

என்றிளைய பருவம்நின திருநட்பைத் திருவருளெற் கிணைத்த தம்மா!
அன்றுமுத லென்னாளும் அருகிருக்கும் பெருவாழ்வை அடையே னேனும்,
ஒன்றாநடுக் காவேரி, உயர்திருச்சி, உரைவழங்க வுறும்பல் ஊர்கள்,
என்றிவற்றிற் பன்னாள்வர் தெய்துமகிழ் வூட்டுமென தினிய ஊழே!

ஐயாற்றில் வைகறைமுன் அயர்மாலை வரைப்பல்தொண் டாற்றிப், பின்னர்
நையாது, நாளும்அக நானூற்றின் தொண்டினினை நண்ணி மீள்தல்,
எய்யாத பொருள்வேட்டோ! இரும்புகழை வேட்டேயோ! இன்றே! இன்றே!
மெய்யார்நின் புலவரையின் மேன்முடியைக் கண்டுமகிழ் மேவற் கன்றோ!

கரந்தைநகர் வெள்ளிவிழாக் காலத்தே யளியேனைக் கடைக்க ணித்தே
சிறந்தவுரை பலவருளிச் சீர்ப்பித்தாய்! செல்காலத் துலக மெல்லாம்
துரந்தபுகழ் வளர்பாண்டித் துரைக்குரைத்த துயர்க்கூற்றைறைச் சுட்டா நின்றாய்!
கரந்தநினைக் காணாமே கவலுறுவேன் புன்மொழியும் காண்பை கொல்லோ!

அறுபதாம் ஆண்டுவிழா அன்புடையேம் இவணியற்றும் ஆர்வம் உற்றேம்!
திருவருள்மற் றதுதன்னைத் திகழும்பர் ஒளியுலகம் சேர்த்த தம்மா!
அரியதிரு ஞானியார் அடிகள்முனம், தமிழவேள், அன்ப ரேனோர்,
பெருமையுற இனிதாற்றப் பெற்றவிழா யாம்செய்த பெற்றித் தன்றோ!

ஒள்ளியநின் னுருவதனை ஒளிப்படத்தே என்றென்றும் உவந்து காண்பேம்!
கல்வியதன் உயர்மாண்பைக் காட்சியுறு நின்னூலிற் கவினக் காண்பேம்!
தெள்ளியநல் லமிழ்தென்னத் தேனருவி தானென்னத் திகழ்நின் சொல்லைப்
புல்லுதல்வல் பொறியதனிற் பொதிந்துகொள அயர்ந்தேமால்! பொறியில் லேமே!.

கரந்தைக் கவியரசு R. வேங்கடாசலம் பிள்ளை.

# சிலப்பதிகாரத்தில் சிலநாடகமாந்தர்

அண்ணுமலைப் பல்கலைக்கழக வரலாற்று விரிவுரையாளரா
யிலங்கிக் காலஞ்சென்ற
**திரு. ச. க. கோவிந்தசாமிபிள்ளை அவர்கள், M. A.**

(முற்றொடர்ச்சி : துணர் ௰௬, மலர் ௬, பக்கம் 180)

**து**ன்பத்தில் கோவலனின் இயல்புகள் சிறந்துவிளங்குகின்றன. தொடர்ச்சியாய் வரும் துன்பங்கள் மக்களின் உளத்தைச் செம்மை செய்கின்றன என்பது உலகமேற்கும் உண்மையன்றோ? கண்ணகியின் கற்பின் உயர்வும் தன் கணவனோடு இன்புறாத அவள் துன்புறு தற்கு முடிவுகட்டின துணிவும், அவள் தன் செம்பாகமான அறிவும், பிறநலன்களும் அப்பொழுதுதான் கோவலனுக்குப் புலப்படுகின்றன. கோவலர்ச் சேரியில் அழகுபெற அட்டில்சமைத்துப் படைத்துப் பாராட்டிய கண்ணகியைக் கூஉய், கோவலன்,

"கல்லதரத்தம் கடக்கயாவதும்
வல்லுந கொல்லோ மடந்தை மெல்லடி" எனவும்,
"மாயங்கொல்லோ வல்வினை கொல்லோ
யானுளங்கலங்கி யாவது மறியேன்,

..........................................

இருமுது குரவரேவலும் பிழைத்தேன்;
சிறுமுதுக்குறைவிக்குச் சிறுமையும் செய்தேன்
வழுவெனும் பாரேன், மாநகர் மருங்கீண்டு
எழுகென எழுந்தாய் என்செய்தனை" யெனவும்,

..........................................

"என்னொடு போந்து ஈங்கென் துயர்களைந்த
பொன்னே கொடியே புனைபூங்கோதாய்
நாணின் பாவாய் நீணில விளக்கே
கற்பின் கொழுந்தே பொற்பின் செல்வி," எனவும்

பல்லாறுகப் பாராட்டுகின்றனன். அவனுடைய வாழ்க்கை அச்சீர் திருத்தத்தால் பயனடைதற்கு முன் அந்தோ! அவன் கொல்லப் பட்டனன்.

இனி, கண்ணகியை இளங்கோவடிகள் சித்தரித்தலை நோக்குவாம். மிகப் பிற்காலப் புலவரைப் போன்று பல சொற்களில் சிலஉறுப்புக்களைப்புனைந்துரைத்தல் இளங்கோவுக்கு ஒப்பமுடிந்த தன்றும். சேக்கிழார் பரவையைக் கற்பகத்தின் பூங்கொம்போ என்றதுபோல, கண்ணகியை, "ஈகைவான் கொடியன்னுள்," என்றனர் இளங்கோவும். கொடி என்றதனுல் அழகும், வான் என்றதனுல் உளத்தின் உயர்வும், ஈகைஎன்றதால் அன்பும், உணர்த்

தப் பெற்றன. பின்னர் "வடமீனின் திறம் இவள்திறம்" என்றதால் அவள்தன் கற்பின் திட்பம் விளங்கிற்று.

அவள்தன் காதல்வாழ்க்கைச்சிறுபோதில் கழியவே, அவளுடைய இயல்புகளில் ஒருவிதமாறுதல் ஏற்பட்டதெனலாம். தன்நாயகன் வேறொருத்தியுடன் புகாரிலேஇன்பந்துய்க்கக்கண்டிருந்தும், கண்ணகி மற்ற சாதாரண பெண்டிரைப்போன்று உளமழுங்கவில்லை; ஆனால் மேனிவாடினாள். கோவலன்பிரிவால் சிறுஇல்லற இன்பத்தை இழக்க நேரிட்டதை அவள் பொருட்படுத்தவில்லை என்பது, கோவலன் மாதவியை விட்டுப்பிரிந்து மீண்டும் தன்னில்லம் அடைந்த வழி கண்ணகி நடந்துகொண்ட முறையினின்றும் அறியலாகும். மருத நிலப்பெண்டிர் கணவர் பரத்தையர் பால்சென்று இல்லம்மீண்ட வழி அவரொடுஊடுதல் வழக்கம். பாண்டியன் நெடுஞ்செழியன் பெருந்தேவியும் ஊடினாள் எனச் சிலப்பதிகாரத்தினாலேயே அறியக் கிடக்கிறது. அங்ஙனமிருக்க, கணவனை மீண்டுங்கண்ட கண்ணகி,

"நலங்கேழ் முறுவல் நகைமுகங் காட்டிச்
சிலம்புள கொண்மெனக்" கூறினாள்,

என ஆசிரியர்கூறுகின்றார். ஊடலின் பின் கூடல் நிகழ்வது இயற்கையாம். கூடலின் விருப்பிருப்பின் கண்ணகியும் ஊடியிருப்பாள். அங்ஙனம் அவள்நடந்துகொள்ளாததன் உண்மை யாதோ? அவள் கணவனைப்பிரிந்திருக்குங்கால் அவள்தன் இயற்கை அறிவு வலிவு பெறவே இன்பவுணர்ச்சி குறையலாயிற்று. இதற்கெடுத்துக்காட்டாக அவள் தேவந்திகைக்குக்கூறிய விடையைக்கூறலாம் "சோம சூரிய குண்டங்களிலாடி காமவேளை வணங்கின் தன் கணவனையும் இல்லற இன்பத்தையும் மீண்டும் பெறலாம்" எனக்கூறிய தேவந்திக்கு "பீடன்று" எனக்கண்ணகி விடைபகர்ந்தாள். அச்சொற்கள் அச்சீர் சால்மங்கையின் உளத்திட்பத்தையும், அறிவின் மேன்மையையும் காட்டுகின்றன. அவள் தன்கணவனோடு மதுரைக்குச்செல்ல ஒருப்பட்டதும், அவ்வுளத்திட்பத்தையே காட்டுவதாகும். கண்ணகியைப் பிரிந்த கோவலன் மீண்டும் தன் மனையடையுமுன், கண்ணகி உலகப் பற்றற்றஅறிவு விளக்கமுற்ற ஓர் இல்லறத்துறவியாயினாள் என்பதே பொருத்தமுடைத்தாம். ஆனால் உளத்திட்பம் மேம்படினும், அவள் உடல்மென்மைவாய்ந்ததாய் இருந்ததென்பது, அவள்புகாரைவிட்டுச் சிறிது வழிநடந்ததும் "மதுரை மூதூர் யாது"? எனவினவினள் என இளங்கோ கூறுதலால் விளக்கமுறும்.

கண்ணகி கோவலனோடு அறிவுத்தொடர்புகொண்டே மதுரை சென்றனளல்லது அன்புத்தொடரால்மட்டும் செல்லவில்லை என்பது பிறிதொறு நிகழ்ச்சியாலும் தெளிவுறும். கோவலன் கள்வனெனக் குற்றஞ் சாற்றப்பெற்றுக்கொல்லப்பட்டான் எனஅறிந்த கண்ணகி கையற்று உடன்உயிர் நீக்கவில்லை; "கள்வனோ என்கணவன்" என அவள் ஞாயிற்றை உசாவியபோதும், பின்னர், தன்கணவன் தூய சிந்தையினன், செயலினன் எனநிலைநாட்டப்பாண்டியனோடு வழக்குரைத்தபோதும் அவளுடைய உயரிய அறிவே தொழிற்படுகின்றது. அன்பொடு மட்டும் இயைந்த வாழ்க்கையை உடையாளாய் அவள்

இருப்பின், கணவன் இறந்த செய்தியைக்கேட்டதும் உயிர்துறந்திருப்பாளன்றே? அவளுள்ளம் அறிவினல் ஆட்சிசெய்யப்பட்டதை அறிந்து போலும் கவுந்தியடிகளும், "கற்புக்கடம் பூண்ட இத் தெய்வம்" என்றூர். கடவுளர் என்றது, பெண் தன்மையாகிய இன்பத்தில் ஈடுபடும் இயல்பு நீங்கப் பெற்றவள் என்பதைக் குறிப்பதாகும்.

பாண்டியனும், அவன் றன்பத்தினியும், மணமதுரையும் தன்னல் அழியநேர்ந்தது கொடுவினையென அறிந்ததும், அவள் அத்துன்ப நிகழ்ச்சிகளை நினைந்து பேரிரக்கம் கொன்டனள் என்பது, குன்றக் குறவருக்கு அவள்விடுத்த விடையால் உணரலாகும். "வள்ளி போல்வீர் யாவிரோ" எனவினவிய குறவரை நோக்கி

"மணமதுரையோடு அரசு கேடுற வல்வினைவந்துருத்தகாலை
கணவனை அங்கிழந்து போந்தகடுவினையேன் யான்" என்றாள்

என இளங்கோவடிகள் கூறுகிறூர்.

சகப்பிரியரால் எழுதப்பெற்ற 'ஒதெல்லோ, என்னும் அவல நாடகத்தில்காணப்படும் 'இயாகோ' வைப்போன்றவன், சிலப்பதிகாரத்திலுள்ள பொற்கொல்லனுவான், அவனுடைய தோற்றத்தை இளங்கோ

"மெய்ப்பை புக்குவிலங்கு நடைச்செலவின்
கைக்கோல் கொல்லன்"

எனச்சில சொற்களில் விளக்கினூர்.

விலங்கு நடைச்செலவினன் என்பது இவண் குறிப்பிடத்தக்கது. நச்சுடைப்பாம்புபோலக்கரந்துறையும் தொழிலையுடையவனென்னும் பொருளை அஃது உணர்த்தியதோடு, அவன் கைப்பட்டார் மீளுதல் அரிதென்பதையும், அச்சொற்றொடர் குறித்து நின்றது. பின்னர் அவனைக் "கூற்றத்தூதன்" என நூலாசிரியர் கூறுவதால் அவன் வெளித்தோற்றத்திலும் உள்ளக்கிடக்கையிலும் கொடியோன் என்பதை அறியலாகும். பன்னிப்பன்னி அவனைப்பொய்த்தொழிற் கொல்லன் என இளங்கோ எழுதுகின்றூர். நுண்கலன்புனைதற்றொழில் என்பதை அச்சொற்றொடர் வெளிப்படையாகக்குறித்து நின்றது. ஆனல் அது வேறொருபொருளையும் உணர்த்தி நிற்கின்றது. பொய் புகலுவதும், கொல்லுதலும் அவனுக்கு இயற்கையாக அமைந்த பண்புகள் என்பதாம்.

அத்தகைய கொடியோன் ஒருசெயலைச் செய்தலென முடிவுகட்டினுல், தனக்கு அதனுல் விளையக்கூடும் தீங்கையும் கருதாது அதைச் செய்தே முடிப்பான். "He (Iago) is quite or nearly as indifferent to his own fate as that of others" என இயாகோவைப்பற்றி ஓராங்கில அறிஞன்எழுதியுள்ளான். இவ்விலக்கணம் நம் பொற்கொல்லனுக்கும் நன்குபொருந்தும். கோப்பெருந்தேவியின்காற்சிலம்பொன்றைத்திருடி

மறைத்த அப்பொற்கொல்லன் கோவலன் கையில் ஒருசிலம்பைக் கண்டதும் அதே பாண்டிமாதேவியின் சிலம்பெனக்கூறித்தான் தப்பிக்கலாம் எனஉளத்தில் முடிவுசெய்து கொள்கிறன், ஆனல் பாண்டிமாதேவி அச்சிலம்பு தன்னுடையதன்று என விலக்கினலோ, பாண்டியன் அதைப்பற்றி ஆராய்வதற்குக் கோவலனையழைத்து உசாவினலோ பொற்கொல்லனின் சூழ்ச்சி எளிதாய் வெளிப்படும். அவன் தன்உயிரையும் இழக்கநேரிடும். பாண்டியன் தன் தேவியின் ஊடலால் மதியிழந்து வீழ்ந்துகிடந்த அமையம்செல்லாது, வேருெரு வேளை பொற்கொல்லன் அவனை அடைந்திருப்பின், நாம்மேற் கூறிய வண்ணம் எல்லாநிகழ்ச்சிகளும் நிகழ்ந்திருக்கும், சிலப்பதிகாரமும் அவலமாய் முடிந்திராது. கொடியோர் மிகத்தாழ்மையுடையோர் போல நடிப்பர் என்பதும், பொற்கொல்லனின் நடத்தையால் விளங்கா நின்றது. கோவலன் அவனை நோக்கி,

"காவலன் றேவிக் காவதோர் காற்கணி
நீ விலை யிடுதற் காகியோ" ... ... ... என வினவ,
"அடியேன் அறியேனயினும் வேந்தர்
முடிமுதற் கலன்கள் சமைப்பேன்"

எனக்கூறி, கைதொழுதேத்தினன் என இளங்கோ கூறுகின்ருர். இத்தாழ்மை நடிப்பு, கொடியோர்க்கு இயற்கையாய் அமைந்திருப்பதால் பிறரை வீழ்த்துதற்குச் சூழ்ச்சிசெய்யும் பொல்லாரெல்லாம் அறிவு நுட்பம் வாய்க்கப்பெற்றவராய் இருப்பர். அரசனல் விடுக்கப்பெற்ற ஏவலிளைஞர் கோவலனைக் கண்ணுற்று, அவன் "கொலைப்படு மகனலன்" எனக்கூறினேரைப் பின்னரும் கோவலனைக் கொல்லும் படித்தூண்டுதற்குப் பொற்கொல்லன் கூறிய கதைகள் அவனுடைய அறிவு நுட்பத்தைத் தெளிவுறுத்துவதாகும். கள்வரின் இயல்பை எல்லாம் முறையே வகுத்துக்கூறி, பொற்கொல்லன் பின்னரும்,

தூதற் கோலத்து வாயிலிலிருந்து
மாதர் கோலத்து வல்லிருட்புக்கு
விளக்கு நிழலில் துளங்கினன் சென்ருங்கு
இளங்கோ வேந்தன் விளக்கொளி யாரம்
வெயிலிடு வயிரத்து மின்னின் வாங்கத்
துயில்கண் விழித்தோன் றேளிற்காணு
துடைவாளுருவ உறைகை வாங்கி
எறிதொறுஞ் செறித்த இயல்பிற்காற்ருன்
மல்லிற் காண மணித்தூண் காட்டிக்
கல்வியிற்பெயர்ந்த கள்வன் றன்னைக்
கண்டோ ருளரெனிற் காட்டும்"

என ஒரு நொடிப்போதில் அறிவின்றிறத்தால் கற்பனைக் கதை ஒன்றைக் கட்டி முடித்தான். அதைத்கேட்ட ஏவலரும் கோவலனை வெட்டி வீழ்த்தினர்.

(தொடரும்.)

# மெய்கண்டார் நூல் மொழிபெயர்ப்பா ? தமிழ் முதல்நூலா ?

பேராசிரியர், திரு. S. சோமசுந்தரபாரதியார் அவர்கள், M. A; B. L.,
பசுமலை.

(முற்றொடர்ச்சி : துணர் ௰௯, மலர் ௰௧, பக்கம் 221)

**அ**தனாலவர் "மெய்கண்டா" ராயினர். அவர் செய்த நூலும் "மெய்கண்டானூலாயிற்று. கடவுள் துணையின்றிக் கடவுளை உயிரறியா தென்பதே சிவஞான சாரமென்பதும், அதுவே மெய்கண்டார் நூலி னுண்பொரு ளென்பதும் பாயிரப் புலவர் கருத்து. மெய்கண்டார் கூறும் உண்மைகளுள் அதுவுமொன்றாவதன்றி அதுவே நூல் முடிபன்று. உலகு—உயிர்—கடவுளின் நிலை வினைத்தொடர் இயல்களை அறுதியிட்டளவையா லுறுதிகண்டுரைப்பது மெய்கண்டார் நூல். அதற்குப் பாயிரம் பாடிய பேரிலாப் புலவர் தாங் கண்டவாறு கூறிச் சென்றார்.

இனிக் கடைப்பாயிரம் கடைச் செருகலாதல் வெளிப்படை. நூலி னிறுதியிலோதும் பாயிரம் புலனெறி வழக்கில் கேட்கப்படாத ஓர் புதுமையாகும். அதன்மேல், முதற்பாயிரம்பெற்ற இந் நூற்குக் கடையிலொரு பாயிரமுடைய தெதற்கு? ஓதும்நூ லெதற்கும் வேதச் சார்பு வேண்டும் என்னும் ஐதிகம் புகுந்த பிற்கால வைதிகப் பண்டித உலகில், வட கைலைச் சிவனார் வாயாற்கூறிய ஆரிய வேதாகம சாரமாய்ப் போதநூலை நந்தி ஓதின உண்மை பரவிய பின்னர், ஊர் பெயரறியா ஒரு பெருஞ் சைவர் செய்து கூட்டிய கடைப்பூட்டிதுவாம். "மெய்கண்டார் நூலியற்றியவ ரல்லர்; மொழி பெயர்த்ததற்கு வார்த்திகப் பொழிப்புரை சேர்த்த அவ்வளவே சுவேதவனர் செய்தது;" என்ற கதையை இணைக்க நினைத்துப் பிணைத்த பின் கூட்டு. ஏது திருட்டாந்த வார்த்திகம் பொழிப்பு மெய்கண்டார் நூலில் முன் இருந்ததில்லை என்று தோன்றுகிறது. அதை நூற்பாவாரி எழுத்து விடாமல் மொழிபெயர்த்துள்ள வடமொழிப் போதத்தில், ஏது திருட்டாந்தம் எதுவும் குறியாமை கருதற்குரியது. முன்னவை முதநூலிற்குப் பின்னிருந்தால், வடமொழிப் பெயர்ப்பிலவை விடுபடமாட்டா. அதிற் சுட்டாது விட்டதால், அம் மொழிபெயர்ப்பின் பின்னிவை செருகப் பெற்றன என்னில் பிசகாகாது. அப் புதுக் கூட்டுக்காதரவாகக் கடைப்பாயிரக் கதை முடைந்திருக்க

லாம். முதற்பாயிரமதற்கு நூலொடு சிற்றுரை விரித்த சிவஞான முனிவரர், கடைப்பாயிரத்தைப் பொருட்படுத்தாமையும் கருதற் பாலது.

கடைசியாக நான் விடை தரவேண்டிய வினா ஒன்றுளது. மாபாடிய கர்த்தர் மாதவ யோகிகள் கூற்றைக் கடுப்பது சமய மரபோடமையுமா? எனச் சிலர் வினவலாம். மெய்கண்டார் செய்தது முதனூலா? மொழி பெயர்ப்பா? என்பதை ஆராய்ந்து, தக்க சான்றும் மேற்கோளும் காட்டித் தம் முடிபு கூறியிருந்தால், அவர்கள் கருத்தை எவரு மதியாதிருக்க இயலாது. தமக்கு முன்னமே, தம்மடக் குழுவினர் தழுவி வழங்கிய கொள்கையை முனிவரர் கடுத்திலா தெடுத்துக் கையாண்டுள்ளார். உபதேசமுறையிற் குரவர் கூறியதை அவமதியாமற்கொண்டு தாமும் கூறினர்போலும். கூர்த்ததம் மதியின் ஓர்பா லுண்மைபார்த்துத் தேர்ந்து தெளிந்து கூறிலர். முனிவர்பாலெனக்குத் தனிமதிப்புண்டு. ஆங்கிலச் சுவடியே முதலிற்றொடங்கி அம் மொழிப் பயிற்சியி லழுந்திய எனக்குத் தோன்றாத்துணையாய்த் தமிழறிவுறுத்திய முதற்பெருங் குரவர் சிவஞான முனிவர். எந்தையார் நண்பர் எனக்குத் தந்த நைடதம் வெறுத்து, நான் முதல் விரும்பிப்படித்து வியந்தது காஞ்சிப்புராணம். சிவன்பாலன்பு தடிக்கச் செய்தெனைப் பதினாலாண்டுப் பருவத்து விசேடதீக்கை பெறவைத்து, தமிழ்ச் சுவையோடு நுண்புல நுகர்வில் வேட்கை விளைத்ததவர் பன்னூற் பயிற்சியே. பிறரெவர் கூற்றையும் அறிவாலாய்ந்து கண்ட மெய்யை நான் கடைப்பிடித்து ஒழுகும் பண்பினை வளர்த்ததவர் நுண்பொருளுரைகளே. பழந்தமிழ்ச் சிவநெறி அழுந்திய உணர்வினேன். அத்துவித வைதிக சித்தாந்தமென்பது பழந் தமிழ் அறியா வடமொழிப் புதுப்பெயர் ஆதலின் அதனை யென் தமிழ்ச் செவி வெறுக்கும். தமிழில் விளங்க வழங்காதவைகள் தமிழர் கடவுட் கொள்கைகளாகாவென்பதென் கருத்து. சிவநெறி தமிழர் பழவழிபாடு, நவநனிமதங்களை விரும்பேனாதலின், நாத்திக மென்பதும் நானறியாதது. மெய்கண்ட பெரியார் நல்ல தமிழர். கடவுளறிவால் கண்ட மெய்ந்நிலையை அரிய இனிய தமிழ் நூற்பாவில் தெளியத் திரட்டிச் செறிய யாத்துளர். அவர் சொன்ன உண்மைகள் என்றும் மன்னியதன்மைய எனினும், அவற்றைத் தொகுத்து அளவை முறையில் வரிசைப்படுத்திச் செய்யுளுருவில் முதலில் செய்தவர் சுவேதவனராகிய மெய்கண்ட தமிழ்ப் பேரறிவாளர். அறிவே மக்களை ஆன்றோராக்கும் கடவுட் பண்பு. அறிவையிகழ்ந்து பிறர்வழிமொழிவார் உறுப்பொத்துப் பண்பொவ்வா வேறு திறத்தினர். அறமறி அறிவின் திறத்தொழுகுவது தமிழரியல்பு. அறிவினும் தங்குழூ மரபினைப் பேணல் ஆரியர் வழக்கு. வடமொழிக் கடலை மாந்தி ஏக்களித்தவர் மாதவப் பொதியைப் புதிய அகத்தியர் ஆதலின், அவர் நம் தமிழ் முனியாயினும் வைதிக வழக்கில் ஊறிய உணர்வினர்; ஊன்றிய காதலர். அவர் மதிநுட்பம் நூலோடுடையராயினும் அதி நட்பு மடத்து மரபினில் வளர்த்த உளத்தினர். அவரிடத்தன்பும் மதிப்புமுடையேனாயினும், மெய்கண்டார்பால் பெருமதிப்புடையேன். முனிவர் பெருமையை முழுதும் பேணும்

நான் அவரினும் பெரியவர் மெய்கண்டாரெனக் கருதுகின்றனன். அவர் அறிவாலே ஆய்ந்து துணியாமல் மடத்துமரபால் உரைத்ததைக் கொண்டு மெய்கண்டாரைப்பொய்யராக்கத் துணிகிலன். அதனு லிதனை வெளியிடத் துணிந்தேன். தவச்சிவஞான முனிவர்க்கன்பு தணிதலாலன்று; தமிழ்ச் சிவநெறியிலும் தவா மெய்கண்ட பெரியா ரிடத்தும், பெருகுமன்பாற்றூண்டப் பெற்றிதைப் பன்முறை முன்னே பல்லோரிடத்தும் சொன்னதையின்று எழுதலாயினேன். தவமுனி பிறந்த பாண்டி நாட்டினேன், அவரும் வணங்கும்சோணுட் டறிஞரை மீக்கூறுவது மிகையாகாதென வைதிகச் சைவரும் வையா துண்மையை நடுநிலை உளத்தால் நாடுவரென்று நம்புகின்றேன்.

## நிகழ்ச்சி அறிவிப்பு

30—4—44-ஆம் நாள் மாலை 6 மணிக்கு நம் கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற்குத் தென்னுட்டுப் போர்முன்னணி அமைப்பாளர் தலைவர் சர். பி. டி. இராசன் அவர்கள் வந்தருளினுர்கள். சங்கத்தலைவர் இராவுபகதூர் A. Y. அருளானந்தசாமிநாடார் அவர்கள் வரவேற்று வாழ்த்துப்பா வழங்கிச் சிறப்புரை கூறினுர்கள். திருவாளர், இராசன் அவர்களும் வாழ்த்தினை ஏற்றுக்கொண்டு தக்கவாறு மறுமொழி கூறினுர்கள். சங்க அமைச்சர் ம. வரதராசன் பி.ஏ., பி.எல்., அவர்கள் நன்றிகூறக் கூட்டம் இனிதே நிறைவெய்தியது.

திரு. இராசன் அவர்கள் தலைமையில் அன்று மாலை 7 மணிக்குச் சங்கப்பெருமன்றத்தில் தஞ்சை மாவட்ட நாட்டுப்போர் முன்னணிக் கூட்டம் நிகழ்ந்தது. திருவாளர், ஐ. குமாரசாமிப்பிள்ளை முதலியோர் சொற்பொழிவாற்றினுர்கள்.

1-5-44-ஆம் நாள்மாலை 6மேணிக்குத் தஞ்சைநகராண்மைக்கழகச் சார்பில் கழகத்தார் ஒருபாராட்டுரையை சர். பி. டி. இராசன் அவர்கட்கு வழங்கினுர்கள். இராசன் அவர்கள் பாராட்டுரையை ஏற்றுக்கொண்டு நன்றியறிவித்தார்கள்.

### வெள்ளிவிழா

கருந்திட்டைக்குடி, திராவிடக் கூட்டுறவுக் கழகக் கருவூலத்தின் வெள்ளிவிழா 30—4—44ஆம் நாள் சர். பி. டி. இராசன் பி.ஏ. பாரட்லா, அவர்களின் சீரிய தலைமையில் சிறப்புறக் கொண்டாடப் பெற்றது. கருவூல உறுப்பினர்களும், தலைவர், அமைச்சர்களும் சர். பி. டி. இராசன் அவர்கட்கு, ஒரு தேனீர் விருந்தும் வாழ்த்திதழும் வழங்கிச் சிறப்பித்தார்கள்.

# சேக்கிழார் பிள்ளைத்தமிழ்

தேவகோட்டை வித்துவான், "பாலகவி" வயிநாகரம்
வே. இராமநாதன் செட்டியார்.

(முற்றொடர்ச்சி: துணர் ௰கூ, மலர் ௰, பக்கம் 199)

முதற் செய்யுளில் "தில்லை வாழ்" அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன் என்னும் திருத்தொண்டத் தொகைத் தலைப்பு, திருவாரூரில் எழுந்தருளியுள்ள புற்றிடங்கொண்ட பெருமானார் கொடுக்க நம்பியாரூரர், அதனை முன் அரைக்காலடியாக வைத்துப் பின் முக்காலே அரைக்காலடியாகச் சேர்த்துச் செய்யுளாகச்செய்து முடித்தாராதலின்,

"கார் கொண்ட சோலைசூழ் ஆரூரர் ஓரரைக் கானம்பி யாரூரர் முக்
காலரைக்காலாக முடிவு செய்தருள் மாக்கவி"' என்று கூறுகின்றார்.

உலகெலாம் எனும் சுருதி, நாப்பணும் ஈற்றும் பொருத்தி; என்பதில், நம்பி ஆரூரரினும் ஒருவழியில் சேக்கிழார் மேல் நின்றார் என்னும் குறிப்புக்காட்டி பெருமான் தந்த முதலடியை நம்பி யாரூரர் ஓரிடத்திலே மட்டும் வைத்துத் திருத்தொண்டத்தொகையைமுடிக்கச் சேக்கிழார் பெருமான் முதல், இடை, கடை, என்னும் மூன்றிடங்களிலும் வைத்தாரென்று கூறுகின்றார்.

பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய
சுருக்கத்து வேண்டும் உயர்வு.

என்னும் திருக்குறளுக்கு இலக்கியராய் நிற்பவர்சேக்கிழாரே என்பதைஅவரது திருத்தொண்டர் புராணத்து அவையடக்கத்தே,

பெருகு தண்கடல் ஊற்றுண் பெருநசை
ஒருசுணங்கனை ஒக்கும் தகைமையேன்

எனும்பகுதியால் நினைவு கூர்ந்து கலைமலிந்த பெரும் புலவர்களெல்லாம் கை குவிக்கவும், கலைமகள் நின்று ஏவல்கேட்கவும், கனகசபையார் முதலெடுத்துத்தரவும் நூல்செய்வார், சுணங்கனை ஒப்பேனென்றது, அவரது பெரும் பணிவைக்காட்டுகின்றது என்னும் கருத்தில்

கலைமலி பெரும்புலவர் கைகுவிக் கக்கலைக்கன்னிநின் றேவல் கேட்கக்
கனகசபையார் முதலளித் தருள வளவாம கத்துவம டைந்திருந்தும்
அலைமலி சுணங்க னெப் பேனென்றுரைத்தருளி யாம் பெருக்கத்து
[ வேண்டும்
ஆன் றபணி வெனுமொழிப் பொருடேற்று குன்றைநகராளி

என்று கூறுகின்றார். கனகசபையார் முதலளித்தருள என்பதில் பொன் மலிந்தாரொருவர் முதற்பொருள் கொடுக்க வாங்கி, தொழில் செய்தார் சேக்கிழார் என்னும் நயமும் புலப்படுகின்றது.

சேக்கிழாரை ஓரிடத்துச்சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய மூவருக்கும் உவமிக்கின்றார்—அது

நம்மை யருள்சிவபாத விருதய ருளத்துவகை நண்ணவொண்
[பொருளாதலால்
நாடுமுழ வாரவலமியைதலா லியாவரு நாவலர்பி ரானென்னலால்
வெம்மை தவிர் புகலியார் முதல்மூவரும்புகலும் வேதத்தமிழ்க்கணுள்ள
மெய்ம்மையை விரித்துத் தெரித்தருள்செய் குன்றையூர் வேந்து

என்பதாகும். சிவபாத விருதயர் உளத்து உவகை நண்ண ஒண்பொருளாதலா லென்பது சிவபாத இருதயருடைய மனத்திலே மகிழ்ச்சிபொருந்த ஒளியுடைய பிள்ளையாதலாலெனவும் சிவபெருமானுடைய திருவடிகளிலே பொருந்திய மனமுடைய அடியவர்களது உள்ளத்திலே மகிழ்ச்சி பொருந்த வந்த ஒள்ளிய செல்வமாதலாலெனவும் சம்பந்தருக்கும் சேக்கிழாருக்கும் பொருந்த இரு பொருள் குறிக்கும் நிலையிலும், உழவாரவலம் இயைதலா லென்பது உழவாரப் பணியின் வன்மை பொருந்துதலாலெனவும் உழவுத்தொழிலின் உயர்வு பொருந்துதலாலெனவும் அப்பருக்கும் சேக்கிழாருக்கும் பொருந்த இரு பொருள் குறிக்கும் நிலையிலும் ஒரு நாவலர்பிரான் என்னலால் என்பது ஒப்பற்ற நாவலூரர் தலைவன் எனப்பெறுதலால் எனவும் சிறந்த நாவலர்களின் தலையரனவன் எனப்பெறுதலாலெனவும் சுந்தரருக்கும் சேக்கிழாருக்கும் பொருந்த இருபொருள் குறிக்கும் நிலையிலும் இப்பகுதி அமைந்திருக்கின்றது.

புலியூர்க்கோட்டத்துத் தோன்றிய சேக்கிழார் பெருமான் புலியூர்க் கோட்டமாகிய தில்லைப்பதியிலே புராணம் பாடியது ஏற்றதென்றும், சேக்கிழாரது திருக்கைகளைக்குவிப்பதற்கு முன்னே தில்லைப்பெருமான் நாயன் மார்களது வரலாறுகளாகிய செல்வத்தை அவரது மனவறையிலே குவித்து விட்டாரென்றும் கூறுகின்றார். குவித்தல் என்றசொல்லை இருபொருள் படத்தில்லைப் பெருமானுக்கும் சேக்கிழாருக்கும் பயன் படுத்தியிருப்பது பாராட்டுதற்குரியது.

நம்பியாரூரர் பரவையார் சங்கிலியாராகிய இருமனைவியரை மணந்த தற்கேற்ப வனப்பகை சிங்கடி என்னும் இருபெண்மக்களையும் பெற்றார் இது

இருபைங்கோதை யாரை வேட்ட
பான்மைக்கிணங்கவோ ரிருபுதல்வி யார் தமைப் பயவாமலே பயந்த
சுத்தராய் வன்றொண்டர்,

என்று பேசப் பெறுகின்றது. கோட்புலிநாயனார் கொடுத்த பெண்களை மக்களாகக் கொண்ட நம்பியாரூரர் தாம் அவர்கட்குத் தந்தையெனத்தமது பாடல்களில் கூறியுள்ளமை அவர்பெண்மக்களைப் பெறுமற்பெற்றசெய்தியைப் புலப்படுத்துவதாகும்.

செங்கீரைப் பருவத்து முதற் செய்யுள் அச்செங்கீரைக்குரிய ஒரு காலை மடக்கி ஒருகாலை நீட்டி இருகைகளையும் நிலத்தில் ஊன்றிக் கொண்டு தலை நிமிர்ந்து முகம்அசைய ஆடுதலைக்கூறுகின்றது. அது

ஒண்கொண்ட பொதுவகத் துலகெலா முய்ய நாலுலகெலா மென்ற
[ தீஞ்சொல்
உவந்தே டெழுத்தாணி கொண்டெழு திரண்டுகையும்புவி யுறப்பதித்து
வண்கொண்ட ஒருதாள் மடித்தூன்றி ஒருதாள் வயங்குற எடுத்தூன்றி
[யொண்

வாய் கவிச்சுவை யொழுக் கறிவிப்பதென வமுத மாட்சிமை யொழுக்
[கெடுப்ப
எண்கொண்ட நெற்றிநீ றிளநிலவு மொண்கா திருங்குழை யிளங்கதிரும்
[விட்டு
எறிப்ப விளமுறுவலும் தோன்ற மலர் திருமுக மெடுத்துவா னளவு
[மோச்சித்
திண்கொண்டகுன்றையம்பதியருள்மொழித்தேவ செங்கீரையாடியருளே

திருத்தொண்டை நன்னாட்டு வேளாளர் குலதிலகசெங்கீரை யாடியருளே
என்பதாகும்.

இதில் தில்லைக்கூத்தர் தந்த "உலகெலாம்" என்ற சொல்லை மகிழ்ந்து ஏடும் எழுத்தாணியும் கொண்டு எழுதுகின்ற இரண்டு கைகளையும் தரையி லூன்றி என்பதும், கவிச்சுவை ஒழுக்கையறிவிப்பதனை வாயமுத ஒழுக்கு உண்டாக என்பதும் மிகுந்தசிறப்புடையன. திருநீறணிந்த நெற்றியைத்திங்கட் பிறைக்கும்குழையைக் கதிருக்கும் உவமித்ததுபேரழகுடையதாகும். சேக்கிழார் பெருமானது போற்றலை செங்கீரைப்பருவத்தின் மூன்ருவது செய்யுள்நன்கு விளக்குகின்றது.

ஒப்பரியதொண்டர்தம் அருமையும் பெருமையும் உவக்குமவரவர்
[செய்கையும்
உவமையில்லாச் செய்கை நுட்பமும் திட்பமும் உம்பர்கோன் அருள்
[தட்பமும்
தப்பரிய செந்தமிழ்த் தொடைநடையு மடையுந் தவாப்பொரு ளணிச்
[சிறப்பும்
தமிழ்மறை அடங்கு பல மந்தணமும் வெள்ளிடைத்தவிரும் வெற்பென்
[விளங்க
வெப்பரிய முழுமதிக்குடைநிழற் றனபாயன் மேயவவை யகநயந்து
வியந்து மெய்ப் பாட்டினெடு பாராட்டி மகிழமேல் மேல்விரித் தருளிய
பிரான்
செப்பரிய குன்றையம் பதியருள் மொழித்தேவ செங்கீரை யாடியருளே

திருத்தொண்டை நன்னாட்டு வேளாளர் குலதிலக செங்கீரையாடியருளே என்பது அப்பாடலாகும். ஒப்பற்ற திருத்தொண்டர்களது அருமையும் பெருமையும் உவப்பாகிய அவர்களது செய்கையும் உவமையற்ற செயல் நுட்பமும் வலிமையும் சிவபெருமானது தண்ணருளும் செந்தமிழ்த் தொடையும் நடையும் கேடற்ற பொருட்சிறப்பும் அணிச்சிறப்பும் தமிழ் மறையினுள்ளடங்கிய மறை பொருளும் வெள்ளிடை மலையென விளங்கும்படி வெம்மையற்ற மதிக்குடை யுடைய அநபாய மன்னனது சபைமன நயந்து வியந்து மனமொழி மெய்கள் மருவப்பாராட்டி மகிழும்படி விரித்தருளிய பெருமானாகிய குன்றத்தூரருள் மொழித்தேவ, செங்கீரையாடியருளுக தொண்டைநன்னாட்டு வேளாளர் குல திலக செங்கீரையாடியருளுக என்பது இச்செய்யுளின் பொருளாகும்.

குன்றத்தூரின் மடங்களில் சோறுநிறைந்துளதெனவும், அந்நகர் மக்களது உள்ளத்தில் தூய்மைநிறைந்துள தெனவும், அவர்களது ஆடைபொன் பொருந் தியவை எனவும் தோள்கள்மணம உடையன எனவும் வயல்கள்பெருவிளைவுக்

நேற்ற சேறுடையன எனவும் வீடுகள் செல்வங்கள் நிறையப்பெற்றன எனவும் மேடைகள் தென்றல் வீசப்பொருந்துவனவெனவும் அங்கே பாடப்பெறும் செய்யுட்கள் தெய்வமண முடையன எனவும் வீடுகளில் சமைக்கப்பெறும் கறிகள் நெய்மணமும் உடையன எனவும் அங்குள்ள குண்டங்கள் எல்லாம் நெருப்பு மணமுடையன எனவும் தெருக்கள் நண்புடைமையையே உடையன எனவும் ஒரு செய்யுளில் கூறுகின்றார். அது

சோறுமணக்கு மடங்களெலாம் தூய்மைமணக்கும் சிந்தையெலாம்
சுவணமணக்கு மாடையெலாம் தொங்கல்மணக்கும் தோள்களெலாம்
சேறுமணக்கும் கழனியெலாம் செல்வம்மணக்கும் மாடமெலாம்
தென்றல்மணக்கும் மேடையெலாம் தெய்வம்மணக்கும் செய்யுளெலாம்
நீறுமணக்கும் நெற்றியெலாம் நெய்யேமணக்கும் கறிகளெலாம்
நெருப்புமணக்கும் குண்டமெலாம் நேயம்மணக்கும் வீதியெலாம்
சாறுமணக்கும் குன்றத்தூர்த் தலைவா தாலோ தாலேலோ
சகலாகம பண்டிததெய்வச் சைவா தாலோ தாலேலோ,

என்பதாகும். ஆசிரியர்கள் நூலாசிரியர் உரையாசிரியர் போதகாசிரியர் ஞானசிரியர் என நால்வகைப்படுவர். இந்நால்வகையாசிரியத்தன்மையும் சேக்கிழார் பெருமானிடத்து அமைந்திருந்தது. திருத்தொண்டத்தொகையாகிய வகைநூல் செய்யத்திருத்தொண்டர்புராணமாகிய விரிநூலைச்சேக்கிழார் பெருமான் செய்தாராதலின் நூலாசிரியர், தேவாரத்தில் காணப்பெறும் திருப்பாசுரம் முதலிய செய்யுட்களுக்குத்தன்னுடைய திருத்தொண்டர் புராணத்து உரைவிரித்துச் செல்லுகின்றாராதலின் உரையாசிரியர், பொய்ச்சமயக்குழியில் வீழ்வாரை நன்னிலையடையப்போதித்தலால் போதகாசிரியர் பொய்ச்சமயவழிநீங்கினோர் மெய்ச்சமயநெறி நிற்கவிதிக்கின்றமையின் ஞானசிரியர் என்னும் கருத்தில்

நாடிய விரிநூல் சொற்றிடுதிறனால் நன்னூல் ஆசிரியன்
நருபாசு ரமுதல் உரைசெய்தலினால் நவிலுரை ஆசிரியன்
நீடிய பரசம யக்குழிவீழ்ந்தவர் நீப்ப போதனைசெய்
நிலையால் போதகாசிரி யன்னிவை நிகழ்தொறு நிகழ்தோறும்
ஆடியஞானத்திறனுற லால் ஞானசிரிய னுநீயென்று
ஆன்றோர் பலரும் புகழப் படுபவ அகிலமெலாஞ்சென்று
கூடிப்புகழ் சால் குன்றத்தூரன் கொட்டுக சப்பாணி
கொற்றச்சேவையர் காவல நாவல கொட்டுக சப்பாணி

என்னும் செய்யுள் அமைந்திருக்கின்றது.

நலம் பெருகுக.

# வரலாற்றுப்பகுதி

**திருச்சிராப்பள்ளி, திராவிட இளைஞர் கழகச்சார்பில்** *30-4-44-ல் நிகழ்ந்த மாபெருங் கூட்டத்தில் திருச்சிநகரமண்டபத்தில்* (Town Hall) **இராவ் பகதூர் பேரறிஞர் (Dr.) A. மதுரம் அவர்களின் திருவுருவப் படத்தைத்** *திறந்துவைக்குமுகத்தான்,* **பொழிலாசிரியர் வித்துவான், கோ. சி. பெரியசாமிப்புலவரவர்கள்** *நிகழ்த்திய சொற்பொழிவு:*

**பெரியோர்களே ! உடன்பிறப்பாளர்களே !**

திருச்சிராப்பள்ளியில் வாழ்ந்து நமக்கெல்லாம் சிறப்பளித்த, சிறந்ததலைவர்களுள் ஒருவரும், பிறர்க்கென வாழ்ந்த பெருமகனுரும், குருமருந்துகளின்மூலம் நாட்டுமக்கட்குற்ற, பிணிகளைப்போக்கி மக்கள் நல்வாழ்வு வாழவழிகண்டோரும், பார்ப்பனரல்லாதாரியக்க வளர்ச்சியில் நாட்டங்கொண்டு அவ்வியக்கத்திற்குத் தலைமைதாங்கிப் பற்பலபணிகள் புரிந்துவந்தவருமாகிய இராவுபகதூர் பேரறிஞர் A. மதுரம் அவர்களின் திருவுருவப்படத்தைத் திறந்துவைக்கும் பணியை எனக்களித்துச்சிறப்பித்த இத்திராவிட இளைஞர் கழகத்தலைவர், திருவாளர். டி. பி. வேதாசலம் பிள்ளை B. A; B. L; அவர்கட்கும், இக்கழகச் செயலாளர்கட்கும் என் உளமார்ந்த வணக்கத்தைச் செலுத்துகின்றேன்.

பேரறிஞர் A. மதுரம் அவர்களின் பண்புகள் பலவற்றையும் உணர்ந்த திருச்சி நகரமக்களாகிய உங்கள்முன், அவரைப்பற்றிச்சில, சொற்களைக் கூறுதல் கொல்லத்தெருவில் ஊசிமதிப்புரைத்த கதை யாய் முடியும் என எண்ணுகின்றேன்.

இத்திராவிட இளைஞர் கழகத்தலைவர், திரு. டி. பி. வேதாசலம் அவர்கள், எங்கள் புரவலரும், எங்கள் சங்கத்தின், கரந்தைப்புலவர் கல்லூரியின் உயிர் நாடியுமாவார்கள். இவர்களின்றேல் எங்கள் **கரந்தைப் புலவர் கல்லூரி** சென்னைப்பல்கலைக் கழகத்தாரின் ஒப்புதல் பெற்றுப் பணியாற்றுதற்கியலாமல் மறைந்திருக்குமென்பதில் ஐய முண்டோ ? கரந்தைத்தமிழ்ச்சங்க வெள்ளிவிழாவின்நினைவுக் குறியாகத் தமிழவேளால் நாட்டப்பெற்ற, "கரந்தைப்புலவர்கல்லூரி" சென்னைப்பல்கலைக்கழகத்தாரின் ஆணைக்கிணங்கி அவர்கள் ஒப்புதலைப் பெறுதற்கு, ஐம்பதினுயிரம் (50000) வெண்பொற்காசுகளை மூல தனமாகச்செலுத்தவேண்டிய நிலைமை ஏற்பட்டு, அத்தொகை முழு மையும் ஒரேகாலத்தில் செலுத்துதற்குரிய வாய்ப்பில்லாமல், தடை யுற்று நிறுத்தப்பெற்றது. தமிழவேள் அவர்கள் ஏறக்குறைய மாணவர் ஐம்பதின்மர்க்கு இரண்டாண்டுகள் உணவளித்து, ஆசிரியர்களை அமர்த்திக்கல்லூரியை நடத்தியும், பல்கலைக் கழகத்திற் குச் செலுத்தற்குரிய ஐம்பதினுயிரம் வெண்பொற்காசுகள்கிடைக்கப்

பெருமையால் கல்லூரியைக் கலைத்து விட்டார்கள். கல்லூரியைக் கலைக்குங் காலத்தில் தமிழவேள் அவர்கள் உளந்தளர்வுற்றுக் கண்ணீர் பெருக்கினார்களாயினும் மேலும் மேலும் உளந்தளர்வுற்றொடுங்கிவிடாமல், எவ்வாற்றாலேனும் இப்பொருளைத் தேடித்தந்து, பல்கலைக்கழகத்தாரின் ஒப்புதலைப்பெறலாம் என்னுந்துணிபுடன் இரண்டு மூன்று மாணவர்களைக்கொண்டு, என்னைக்கல்லூரியை நடத்தப்பணித்தார்கள். ஏனைய மாணவர்களையெல்லாம் வெவ்வேறிடங்கட்குப்போய், கல்விபயிலும் படியும் பணித்தார்கள். அதுபோது அவர்கள் கூறியசொற்கள் இன்றும் என்செவிகளில்ஒலித்துக்கொண்டிருக்கின்றன. "நாட்டாண்மை நகராண்மைக் கழகங்களிலும், மண்டிலச்சட்டமன்றத்திலும், உறுப்பினராதற்பொருட்டு, அழிவழக்காடி, ஐம்பதினாயிரம், அறுபதினாயிரம்எனப் பொருளை வீணே அழிக்கின்ற தமிழ்மக்கள் ஒருகல்லூரி நிலைத்தற்குஒருஐம்பதினாயிரம் வெண்பொற் காசுகளைத்தர உடன்படமாட்டேன் என்கின்றனர். இவர்கள் தாய்மொழிப்பற்றிருந்தவாறென்னே!" என உளங்கசிந்துரைத்தனர். இவ்வாறு தமிழவேளவர்கள் உளந்தளர்வுற்றிருந்த காலையில் இழுக்கலுடையுழியூற்றுக்கோல் போன்று நம் வள்ளல் டி. பி. வேதாசலம் அவர்கள் தன் சிறிய தகப்பனாருக்குரிய, பதினாயிரத்திற்கு மேலும் மதிப்புள்ள அறநிலையப்பொருள்களைக் கரந்தைப் புலவர் கல்லூரிக்கென உளமுவந்துஎழுதித்தானும் தன்தந்தையாரும் கையெழுத்திட்டுக் காப்புச் (Register) செய்து, அவ்வாவணத்தைத் தான் கையில் எடுத்துக்கொண்டு, கரந்தைத்தமிழ்ச்சங்கத்திற்குவந்து, தமிழவேளவர்களிடம்தந்து தம்குடும்ப வள்ளன்மையை வெளிப்படுத்தினார்கள். இப்பொருளையும், தஞ்சைப் புதுத் தோட்டத்தில் கல்லூரிக்கெனத் தமிழவேள் வாங்கிய 37 ஏக்கர்நிலங்களையும், சங்கத்திற் குரிய பிறசொத்துக்களையும் சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு ஈடுகாட்டிக்கல்லூரி நடத்துதற்குத்தற்காலிகமாக ஒப்புதல் பெற்றுக் கரந்தைப்புலவர் கல்லூரி நடந்து வருகின்றது. இக்கல்லூரி நிலைத்த முறையில் பல்கலைக்கழகத்தாரின்ஒப்புதலைப்பெறுதல் வேண்டுமேல், இன்னும் பதினாயிரம் வெண்பொற்காசுகளைக் கல்லூரிக்கென யாம் பல்கலைக்கழகத்திற்குச் செலுத்துதல் வேண்டும். திருச்சிராப் பள்ளியிலுள்ள வள்ளலாகிய நம், **வேதாசலம் பிள்ளை** அவர்களின் குடும்பப் பொருளைக் கொண்டு பல்கலைக்கழகத்தாரின், ஒப்புதல் பெற்று நடந்துவரும் இக்கல்லூரி பொருள் முட்டுப்பாட்டால் தடையுற்று நின்று விடாமல் ஓம்படைபுரிந் துயர்த்துதல், திருச்சிமாநகரிலுள்ள செல்வர்கட்குரியகடமையென அறிவிக்கவிரும்புகின்றேன் விளம்பரம் வேண்டாது, வேண்டாமையென்னும் விழுச்செல்வம் பூண்டு, தம்பொருளைத் தமிழ்வளர்ச்சிக்கென உளமுவந்து கரந்தைப் புலவர்கல்லூரிக்களித்த திரு. வேதாசலம் பிள்ளை அவர்களையாம் பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம். அக்காலத்துத் தமிழரசர்கள், வள்ளல்கள், குறுநிலமன்னர்கள், ஆகியோர் தமிழ்வளர்ச்சிக்கெனத் தாம் அரிதின்முயன் றீட்டிய பொருள்களை அள்ளி, அள்ளிவழங்கினார்கள். அத்தகையவள்ளல்களும், அரசர்களும் தமிழகத்தினின்றும் மறைந்தொழிந்தஇக்காலத்தில் பதினாயிரம்வெண்பொற்காசுகள் மதிப்புள்ள பொருளைத்தமிழ்வளர்ச்சிக்கென வழங்கியநம்வேதாசலம்

அவர்களையாம் மன்னரெனப் போற்றுவதா? வள்ளலெனவாழ்த்து வதா? இவர்கள் புகழ்ச்சி வேண்டராயினும் **தமிழ்நாட்டுவரலாற்றில், தமிழ்மொழிவரலாற்றில் இவர்கள் பெயர் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பெறுமென்பதையறிவிக்க விரும்புகின்றேன்.** இவர்களின் றேல், திரு. பொன்னுசாமிபிள்ளை அவர்களின் பொருள் தமிழ் வளர்ச்சிக்குப் பயன்பட்டிருக்குமோ?

சிறு அறம் புரிவோர் பெருங்கொடையாளர் எனப்போற்றப் பெறுதலை யாம் நன்கு அறிவோம். இத்தகைய அறஞ்செய்த இவர்கள் செயல் தமிழ்நாட்டில் இதுகாறும், ஒரு செய்தித்தாளிலும் வெளிவராமையோன்றே இவர்கள் விளம்பரம் வேண்டாதாரென் பதை யறிவிக்கின்றதன்றோ? இங்ஙனம் விளம்பரம் வேண்டா வீறுடைத்தலைவர் வேதாசலம் அவர்கள் இக்கழகத்தலைவராயுள்ளாராதலானும், இவர்கள் அளித்த பொருளால் கரந்தைப்புலவர் கல்லூரி நடந்துவருகின்றமையாலும், அக்கல்லூரியில் விரிவுரையாளனுக யான் பணிபுரிகின்றேன் என்ற காரணத்தாலுமே நீங்கள் பிறர்க்கென வாழ்ந்த நம், மதுரம் அவர்களின் திருவுருவப்படத்தை இந்நகர மன்ற மண்டபத்தில் திறந்துவைக்கும் பணியை எனக்களித்துள்ளீர்கள் என எண்ணுகின்றேன்.

### இரரவுபகதூர் பேரறிஞர் A. மதுரம் வரலாறு.

நம், பேரறிஞர் A. மதுரம் அவர்களின் தந்தையார் சாமுயேல் மதுரம் என்பதாம். இவரின் சொந்தஊர் திருநெல்வேலிமாவட்டத் தைச்சேர்ந்த "**நாசேரத்து**" என்பதாம். இவர்கள் நாடார் மரபைச் சேர்ந்தவர்கள். கிறித்துவ மதத்தைப் பின்பற்றியொழுகியவர்கள். சாமுயேல்மதுரம்அவர்கள் 1872முதல் நாற்பத்திரண்டு (42)-ஆண்டுகள் எஸ். பி. ஜி. மிஷன்பெயரால் தென்னிந்தியா முழுமையும் சிறந்த மருத்துவப்பணி செய்திருக்கிருர்கள். பல மருத்துவச்சாலைகளை அமைத்திருக்கிருர்கள். இவர்கள் மருத்துப்பணி காரணமாக 1872 முதல் திருச்சி மாவட்டத்தில் குடியேறினுர்கள். திருச்சி மாவட்டத் துள்ள "**இருங்களூர்**" என்ற சிற்றூறில் 1877-ஆம் ஆண்டு சூன் திங்கள் 29-ஆம் நாளில் நம், மதுரம் அவர்கள் பிறந்தார்கள். நம் மதுரம் அவர்களின் உடன்பிறப்பாளர்கள் நான்கு ஆண் மக்களும், ஒரு பெண் மகளுமாவார்கள். இவர்கள் யாவரும் எல். எம். பி. எனும் மருத்துவப் பட்டம் பெற்றுச்சிறப்புற மிளிர்கின்றனர். மதுரம் அவர்களின் சிறிய தகப்பனுர் மக்களனைவரும் சிறந்த மருத்துவப் பட்டங்களைப்பெற்றுத் திகழ்கின்றனர். இங்ஙனம் மூன்றுதலைமுறையாக, நம் மதுரம் அவர்களின் குடும்பத்தார் தமிழ் நாட்டில் சிறந்த மருத்துவப்பணி புரிந்து வருகின்றனர்.

நம், மதுரம் அவர்கள் சிறந்த மருத்துவராகமட்டுமன்றித் திருச்சி மாநகரிலும் பிறவிடங்களிலுமுள்ள பொதுநிலையங்களிலும் பொதுக் கழகங்களிலும் உறுப்பினராயமைந்து பெரும்பணி புரிந்துள்ளார்கள். இவர் திருச்சிராப்பள்ளி நகரமன்ற உறுப்பினராக ஒன்பது ஆண்டுகள்

பணிபுரிந்துள்ளனர். திருச்சிமாவட்ட நாட்டாண்மைக்கழக உறுப்பினராக ஆறு ஆண்டுகள் பணிபுரிந்துள்ளனர். அமெரிக்க — இலந்தன் இராசாயன ஆராய்ச்சிக் கழகத்தில் 1907-ஆம் ஆண்டுமுதல், 1915-ஆம் ஆண்டு வரையில் இந்தியாவின் சார்பில் உறுப்பினராக இருந்து பணியாற்றியுள்ளார்கள். திருச்சிராப்பள்ளியிலுள்ள சிறந்த கல்லூரிகள் மூன்றனுள் ஒன்ருகிய எஸ். பி. ஜி. கல்லூரியின் பொறுப்புக் கழக உறுப்பினருள் ஒருவராகப் பன்னிரண்டாண்டிருந்து பணியாற்றியுள்ளார்கள். திருச்சி Y. M. C. A. எனுங் கழகத்தின் நிலைத்த புரப்பாளராகவும், துணைத்தலைவராகவும் இருந்து பணியாற்றியுள்ளார்கள். திருச்சிமாவட்டத் தென்னிந்திய நலவுரிமைச் சங்கத்தலைவராகவும் திராவிட இளைஞர்கழகப்புரப்பாளராகவும் இருந்து பணியாற்றியுள்ளார்கள். அண்மையில் தாம்பரம் கிறித்துவக் கல்லூரியுடன் இணைக்கப்பெற்ற, **கிறித்துவ இசைக்கழகம்** எனும் கழகத்தை நிறுவி அக்கழகத்தின் நிலைத்த காப்பாளராகவும் விளங்கிஞர்கள். தஞ்சை, திருச்சி, திருநெல்வேலி மாவட்டங்களிலுள்ள கிறித்துவர்கள் யாவரும் **கத்தோலிக்க பிராடஸ்டண்டு** எனும் வேற்றுமைக்கிடனின்றி ஒன்றுபடும் முறையில் இவர்கள் முயற்சியால், "**கிறித்துவ முன்னேற்ற சங்கம்**" என்ற கழகம் நிறுவப்பெற்றுச்சிறந்த பணியாற்றிவருகின்றது. ஒவ்வோராண்டும் அச்சங்கச்சார்பில் நடைபெறும் பாட்டுப் போட்டியில், வெற்றிபெறுபவர்கள் தங்கம், வெள்ளிகளாலாகிய பூக்களைப் பரிசளிக்கப் பெறுகின்றனர். இருபிரிவினரும் ஒன்றுகூடி மனமாறுபாடின்றிக் கலந்து பழகியும் வருகின்றனர்.

### மருத்துவமுறை

இவர்களால் ஆராய்ந்து காணப்பெற்று நடைமுறையில் மக்கட்குற்ற பிணிகளைப் போக்கி உலகமெங்கும் புகழ்பெற்று விளங்கும் குரு மருந்துகளின் பெருமையை அறியாதார் யார்? இந்திய மருத்துவ முறைகளையும், ஆலோபதிமுறைகளையும் நன்கு ஆய்ந்து அவற்றிற் சிறந்த இம்மருந்து உலகமருந்துகட்கெல்லாம் தலைமை தாங்கும் எனக் கருதிய நம், மதுரம் தன்ஞல் கண்டுபிடிக்கப் பெற்ற மருந்தினுக்குக் குருமருந்தெனப் பெயரமைத்துள்ளனர். இம் மருந்தைத் தரும் மருத்துவச்சாலைகள் இலங்கை, பர்மா, முதலிய பிற நாடுகளிலும் உள்ளனவெனின் இம்மருந்தின் பெற்றியை யானென்னென்றியம்புவேன்?

### கொடைவழங்கல்

நம், மதுரம் அவர்கள் ஆண்டுதோறும் 1500 வெண்பொற்காசுகள் மதிப்புள்ள மருந்துகளைத் தென்னிந்தியாவிலுள்ள கிறித்துவ ஆலயங்கட்கும், அவைகளை ஒட்டிய பள்ளிக்கூடங்கட்கும் இலவசமாக அளித்துவந்தனர். ஏழை விதவைகட்கு, கிறித்துவப்பெருநாட்களில் உடைகள் வாங்கிக் கொடுப்பதற்கென்று ஏறக்குறைய 20000 வெண்பொற்காசுகள் பெறக்கூடிய நிலங்களைத் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள மார்க்நாதபுரம் கிறித்துவ ஆலயத்தாரிடம் ஒப்படைத்திருக்கிருர்கள். தன் பிறப்பகமாகிய இருங்களூர் எனும் சிற்றூரில், எஸ். பி. ஜி. மிஷன் மேற்பார்வையில் நடைபெறும்

ஒரு பள்ளிக்கூடக் கட்டிடத்திற்காக 3000 வெண்பொன்கள் நன் கொடையளித்துள்ளார்கள். பழமையான தாயகமான திருநெல்வேலி மாவட்டத்துள்ள நாஸோத்து என்ற ஊரில் தன் கொடை விளங்க 2500 வெண்பொற்காசுகள் செலவிட்டு ஒரு பள்ளிக்கூடம் கட்டிக்கொடுத்துள்ளார்கள். திருச்சி நகரத்திலுள்ள அரசியலார் தலைமை மருத்துவக் கோட்டத்துள் காலஞ்சென்ற "ஐந்தாவது சார்ச்சு" மன்னரின் நினைவுக்குறியாக 5000 வெண்பொற் காசுகள் செலவில் ஒரு பிள்ளைப் பேற்று வளர்ப்பு நிலையத்தை நாட்டிக் கொடுத்துள்ளார்கள். 10000 வெண்பொற்காசுகள் செலவிட்டு ஒரு பெரிய கட்டிடமொன்று கிறித்துவ சமூகக் கூட்டங்கள் நிகழ்த்தவும் வேற்றுமத விழாக்கள் நிகழ்த்தவும் பயன்படுமுறையில் கட்டி உதவியுள்ளார்கள். திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கிறித்துவ ஏழை விதவைகளின் பிள்ளைகளின், கல்லூரிப்படிப்பிற்காகவென்று ஆண்டுதோறும் 350 வெண்பொற்காசுகள் நன்கொடையளித்து வந்தார்கள். இவர்களின் அரிய உதவியை ஆறு, அல்லது ஏழு மாணவர்கள் ஆண்டுதோறும் பெற்றுப் படித்துவந்தார்கள். மணப்பாறை, வையம்பட்டி முதலிய இடங்களிலுள்ள, குற்ற பரம்பரை வகுப்பினர்களுடைய பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்காகவும், பிற உதவிக்காகவும், 3500 வெண்பொற்காசுகள் கடன்கொடுத்து உதவியுள்ளார்கள். பிஷப் ஹீபர் உயர்நிலைப்பள்ளிக்கும்,செண்டு சோசப்பு கல்லூரிக்கும் நூற்றுக்கு மேற்பட்ட விலை மதிப்புள்ள வெள்ளிக் கிண்ணங்களையும் பூக்களையும் பரிசாக அளித்துள்ளார்கள். அரசியலார் இறங்கியுள்ள போர் வென்றியுறுவான் வேண்டி ஆயிரக் கணக்கில் பொருள்களை அள்ளி அள்ளிப் போர் நிதிக்கு வழங்கியுள்ளார்கள்.

இவர்களுடைய பொதுநலத் தொண்டுகளையும் பிறர்க்கென வாழும் பெருந்தகைமையையும் அறிந்த அரசாங்கத்தார் 1935-ல் இவருக்கு மன்னர்பிரான் வெள்ளிவிழாப்பூவை அளித்து ஆதரித்தார்கள். 1937-ல் இவருக்கு இராவுசாகிபு பட்டத்தை வழங்கி மகிழ்ந்தார்கள். 1943-ல் இராவ் பகதூர் எனும் பட்டத்தை வழங்கினார்கள். இத்தகுபட்டங்களையெல்லாம் பெற்றுச் சிறந்த பொதுத்தொண்டாற்றி ஒருபொருளும் மன்னு உலகத்துமன்னிய புகழை நாட்டி மக்களுளங்களைக் கொள்ளைகொண்டு மக்கட்டொண்டுமாற்றிய நம், மதுரம் அவர்கள் துடுமென மாரடைப்பால் 1944 ஏப்பிரல் 7-ஆம் நாள் இவ்வுலகவாழ்வினின்றும் மறைந்தார்கள். இத்தகு பொதுநலத் தொண்டரின், கொடை வள்ளலின் திருவுருவப் படத்தை இத்திருச்சிநகர மன்றமண்டபத்தில் திறந்துவைக்கின்றேன். இப்படத்தைக்கண்ணுறும் இளைஞர்களும் செல்வர்களும் இவர்களைப் போன்று பிறர்க்கென வாழும் பெருவாழ்வை மேற்கொண்டு நற்செயலாற்றி இவர்களைப்போன்றே நற்புகழ் நட்டு வாழ்வார்களாக.